

09.11.2026 துளிகள் – 45

ஜீவிய மாற்றம் இல்லாமல் 'சத்தியம் அறிந்ததில்' மேன்மை இல்லை!

பரிசுத்த வாழ்க்கை இன்று வாழும் கிறிஸ்தவர்களுக்கு தூரமானதற்கு காரணம், உலகத்திலிருந்து இவர்கள் வேறு பிரிக்கப் பட்டு வாழவில்லை.... ஆகவே, பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் அவர்கள் மீது தங்கவில்லை. இன்னமும் உலகத்தை தங்களோடு வைத்துக்கொள்ளும் விசுவாசிகளிடம் பரிசுத்த ஆவியானவர் எப்படித் தங்குவார்? ஆகவே அவர்கள் பரிசுத்தமாயும் வாழவில்லை..... தேவன் தரும் மகிழ்ச்சியையும் பெறவில்லை!

இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளில் பேசும் சத்தியங்களில், மேலும் மேலும் 'தண்ணீர் ஊற்றப்பட்டு' நல்ல மருந்தாய் குணப்படுத்த வேண்டிய சத்தியம், இந்த தண்ணீரில் வடிந்து போய், அங்கு அமர்ந்திருக்கும் ஒருவரையும் சுகப்படுத்தவில்லை. இன்றைய திரள் கிறிஸ்தவ விசுவாசிகள், கிறிஸ்தவத்திற்கே அவமானமான, தரம் கெட்ட வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! இந்த இழிநிலை, முதலாவதாக நம்மில் மாற இடம் தருவோமாக!

– ரத்னம்